| | |
|---|---|
| **Publication** | Maalai Sudar |
| **Edition** | Chennai |
| **Date** | 06/01/2011 |
| **Page** | 03 |

### இந்திய கணக்காளர் நிறுவனம் சார்பில் நடக்கிறது

# 52-வது தேசிய மாநாடு

**சென்னை, ஜன.6:**

**இந்திய கணக்காளர் நிறுவனம் சார்பில் சென்னையில் 52-வது தேசிய மாநாடு தொடங்கியது. இம்மாநாடு வரும் 8-ந் தேதி வரை நடைபெற உள்ளது.**




சென்னை கிண்டியில் உள்ள லீ மெரிடியன் ஓட்டலில் இந்திய கணக்காளர் நிறுவனம் சார்பில் 52-வது தேசிய மாநாடு இன்று தொடங்கியது. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இம்மாநாட்டில் புதுப்புது சவால்கள் குறித்து விவாதிக்கப்படுவது வழக்கம்.

அதேபோல் இந்த ஆண்டும் தொழிற்சாலைகளில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டு அந்த சிக்கலை போக்க புதிய வடிவிலான கையாளும் திறன் கொண்டு வரப்படும்.

இந்த ஆண்டு நடைபெறும் இந்த மாநாட்டில் புதிய தொழில் முனைவோர்க்கான சவால்கள், நம்பகத்தன்மை மற்றும் மதிப்பு கூட்டுதல் என்ற தலைப்பில் மாநாடு நடைபெறுகிறது.

இம்மாநாட்டின் போது ஐசிஐசிஐ வங்கியின் நிர்வாக இயக்குனர் சண்டா டி கொச்சார், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குனர் சீனிவாசன், தேசிய சிறு நிறுவன கழகத்தின் தலைமை நிர்வாக இயக்குனர் எச்.பி.குமார், இந்திய நிலக்கரி நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குனர் பார்த்தா எஸ் பட்டாச்சாரியா, ஆர்ச்சிட் கெமிக்கல் மற்றும் பாராமெடிக்கல் நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குனர் ராகவேந்திர ராவ் உள்பட பலருக்கு இந்த ஆண்டுக்கான சிறந்த நிர்வாகிகளுக்கான விருது வழங்கப்பட உள்ளது.

மத்திய நிதித்துறை இணையமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் நாராயணசாமி, ஆந்திர மாநில பதிவுத்துறை அமைச்சர் தோட்டா நரசிம்மம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு மாநாட்டில் உரையாற்ற உள்ளனர்.